**CC.No**. 54/2025

**Date**: 16.04.2026

**ம.சா. 1. சோலச்சி, காளிதாஸ், பள்ளத்தூர்.**

**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1) எனக்கு மாத வருமானம் எவ்வளவு என்றால் ரூ. 8 ஆயிரம். எனது கணவரின் மாத வருமான எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. எதிரியின் மகளின் திருமணம் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்றபோது நான் சென்றேனா என்றால் மண்டபத்திற்கு சென்றேன், கோவிலுக்கு செல்லவில்லை. நான் யாரிம் ஏலச்சீட்டு போட்டேன் என்றால் காரைக்குடியில் உள்ள விசாலம் சிட்டில்போட்டேன். அதை எப்போது எவ்வளவு தொகைக்கு முடித்தேன் என்றால் 15.10.2023ல் ரூ. 2 லட்சத்து 30 ஆயிரத்திற்கு முடித்தேன். மேற்படி விபரம் ம.சா.ஆ.12ல் உள்ளதா என்றால் 12.10.2023 தேதியிட்டு ரூ.3 லட்சம் என்று சிவப்பு மையினால் உள்ளது. மேற்படி ம.சா.ஆ.12ன் படி ஏலச்சீட்டு 2025 வரை தொடர்ந்து உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் மேற்படி பணத்தை எதிரிக்குதான் கொடுத்தேன் என்பதற்கு எந்தவித ஆவணமும் இல்லை என்று சொன்னால் நான் கையில்தான் கொடுத்தேன்.**

**2) நான் பணத்தை கொடுத்த பின்னர் நான் போன் மூலம் தொடர்பு கொண்டு எதிரியிடம் பணம் கேட்டதாக சொல்லப்படும் தேதி தெரியுமா என்றால் 2024ம் வருடம் ஜனவரி மாதம் 25 தேதிக்கு மேல் இருக்கும். நானும் எனது கணவரும் வெவ்வேறு சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எனவே என் குடும்பத்திற்கும், எதிரி குடும்பத்திற்கும் சரியான உடன்பாடு இல்லை என்றால் சரியல்ல. பணம் கொடுத்தற்கு பின்பு தான் பிரச்சனை நிலவி வருகிறது. 16.12.2024 அன்று எனது 2வது குழந்தையை எதிரியின் பாதுகாப்பில் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் பெற்று பின்பு எதிரியின் வீட்டில்தான் தங்கி இருந்தேன் என்றால் சரியல்ல. நான் விசாலம் சிட்பண்ட்டில் எடுத்த பணத்தில்தான் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துமனையில் எனது இதய தொடர்பான சிகிச்சை மற்றும் குழந்தைபேறுக்கு பயன்படுத்தி விட்டேன் என்றால் சரியல்ல.**

3) நான் விசாலம் சிட்பண்ட்டில் இருந்து பணத்தை எவ்வாறு பெற்றேன் என்றால் எனது வங்கி கணக்கு மூலம் பெற்றேன். மேற்படி தொகை வரவு பெற்றதாக ம.சா.ஆ.11ல் இல்லை என்றால் சரியல்ல. அது ரூ.2 லட்சத்து 31 ஆயிரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் எதிரிக்கு பணம் செலுத்தியதாக விபரம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி ஆவணத்தில் எதிரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதிரி சொன்னதன் பேரில் எதிரியின் மகள் மற்றும் உறவினர் கணக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது. உறவினர் யார் என்றால் அவர் பெயர் தெரியாது. எதிரிக்கு மதுரையில் எத்தனை சொந்த வீடு உள்ளது என்றால் தெரியாது. நானும் எனது வீட்டுக்காரரும் சென்று எதிரியின் கோச்சடை வீட்டிற்கு சென்று எங்களுக்கு தெரிந்த நபருக்கு வீட்டை கிரையம் செய்து தரவேண்டும் என்ற வலியுறுத்தினோம் என்றால் சரியல்ல. பணம் வாங்கும்போது எதிரி மேற்படி வீட்டை ஒத்திக்கு வைத்து பணத்தை திருப்பி தருவதாக சொன்னார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனவே எனக்கு எதிரிக்கு சொந்த வீடு இருப்பதை தெரிந்துதான் நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அவ்வாறுதான் என் தந்தையிடம் எதிரி சொன்னார்.

4) மேற்படி விபரங்கள் அனைத்தும் என் தாயாருக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி வீட்டை அடமானம் வைத்து ரெப்கோ வங்கியில் அடமானம் வைத்து வீட்டுக்கடன் வாங்கினேன் என்றால் சரியல்ல. அது எதிரியின் மகளின் முதல் திருமணத்திற்காக வாங்கப்பட்டது. எவ்வளவு தொகை என்றால் ரூ.19 லட்சம். கோச்சடை வீட்டின் உரிமையாளர் யார் என்றால் எதிரிதான். மேற்படி கடனை யார் பெற்றார் என்றால் நான், எதிரி, என் கணவர், என் மாமியார். மேற்படி தொகையை யார் வாங்கியது என்றால் என் கணவர் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டது. மேற்படி ரெக்கோ வங்கியின் வங்கி கணக்கு பட்டியல் எ.ம.சா.ஆ.2 ஆகும். (புகார்தாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது) கோட்டையூரில் என் கணவருக்கு சொந்தமான வீடு உள்ளதா என்றால் தற்போது இல்லை. அதன் விசாலம் என்ன என்றால் நினைவில்லை. எ.ம.சா.ஆ.1ல் உள்ள விலாசமும் கோட்டையூர் விலாசம் என்றால் சரிதான். மேற்படி 2 விலாசத்தில் உள்ள சொத்தும் என் கணவருக்கு சொந்தமானது என்றால் சரிதான்.

**5) மேற்படி ரெக்கோ வங்கியில் பெற்ற கடனை வைத்துதான் கோட்டையூரில் வீடு கட்டினோம் என்றால் சரியல்ல. என் கணவர் வருமான வரி தாக்கல் செய்கிறார் என்றால் தெரியாது. என் கணவர் குறித்த விபரம் குறித்த எந்த விபரமும் தெரியாது என்று சொல்வதால் நான் அவருடன் வாழவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் குறித்து அனைத்து விபரமும் எனக்கு தெரிந்தும் நான் அதை சொல்ல மறுக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது வரை கோட்டையூரில்தான் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. கோச்சடை வீட்டை நானும் என் கணவரும் பூட்டை உடைத்து அத்து மீறினோம் என்றால் சரியல்ல. மேற்படி வீட்டை வேறு நபருக்கு விற்பனை செய்வதற்காக எதிரியையும், எதிரியின் மனைவியையும் கடத்தினோம் என்றால் சரியல்ல. கடந்த 28.03.2024 அன்று எதிரியையும், எதிரியின் மனைவியையும் கடத்தி காரைக்குடியில் வைத்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. அவர்களாகத்தான் வந்தார்கள். என் நாத்தனார் 29.03.2024 அன்று மதுரை எஸ். எஸ் காலனி காவல் நிலையத்தில் அவரது தாய் மற்றும் தந்தையரை காணவில்லை என்று புகார் அளித்தார் என்றால் காணவில்லை என்று காவல் நிலையத்தில் இருந்து போன் வந்தது. 30.03.2024–ல் என் மீதும், என கணவர் மீதும் மதுரை வருவாய் கோட்டாட்சியர் அலுவலத்தில் புகார் அளிக்கப்பட்டு அதில் நாங்கள் ஆஜர் ஆனோம் என்றால் சரிதான். மேற்படி விசாரணையில் இந்த வழக்கு கடன் குறித்து சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரி என்னிடம் காசோலை கொடுத்ததாக சொன்ன தேதியில் நான் எதிரியின் வீட்டில்தான் இருந்தேன் என்றால் சரியல்ல. மாற்றுமுறை ஆவண சட்டத்தின்படி எதிரி எவ்வித கடமை பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எதிரி எவ்வித பணமும் திருப்பி கொடுக்க கடமைபட்டவர் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கு காசோலைக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் புகாரில் வெவ்வேறு தேதிகளில் பணம் கொடுத்ததாக சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. நானும் என் கணவர் மீது உள்ள காழ்ப்புணச்சியின் காரணமாக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.16 18:26:29 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)